சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை – பழங்குடியினர் நலம் – கல்வி – பள்ளிகள் மற்றும் விடுதிகள் – பழங்குடியினர் நலத்துறையின் கீழ் இயங்கி வரும் 312 பழங்குடியினர் நல உண்டி உறைவிடப் பள்ளிகள் மற்றும் 43 விடுதிகளுக்கு பராமரிப்பு மற்றும் பணிகள் தலா ரூ.20,000 வீதம் ரூ.71 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளுதல் – நிர்வாக ஒப்பளிப்பு மற்றும் நிதி ஒதுக்கீடு – ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந.2) துறை

அரசாணை(நிலை) எண்:05

நாள் : 05.01.2021.
திருவள்ளுவர் ஆண்டு 2051
சார்வரி, மார்கழி 21–ஆம் நள்.

படிக்க:–

பழங்குடியினர் நல இயக்குநரின் கடித எண்.ப.மே/ ஈ1/ 2717/ 2020, நாள். 07.04.2020.

----

ஆணை :

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்கள் 2020–2021–ஆம் ஆண்டிற்கான மானிய கோரிக்கையின் போது சட்டமன்றப் பேரவையில் கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டார்.

**"பழங்குடியினர் நலத் துறையின் கீழ் இயங்கி வரும் 312 பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகள் மற்றும் 43 விடுதிகளில், தலா ரூ.20,000/– வீதம் மொத்தம் ரூ.71 இலட்சம் மதிப்பீட்டில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படும்".**

2. இவ்வறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக பார்வையில் படிக்கப்பட்ட கடிதத்தில், பழங்குடியினர் நல இயக்குநர், பழங்குடியினர் நல இயக்குநர் கடிதத்தில், பழங்குடியினர் நலத்துறையின் கீழ் 18 மாவட்டங்களில் 209 தொடக்கப் பள்ளிகளும், 52 நடுநிலைப் பள்ளிகளும், 33 உயர்நிலைப் பள்ளிகளும், 18 மேல்நிலைப் பள்ளிகளும் ஆக மொத்தம் 312 பள்ளிகள் இயங்கி வருகின்றன என்றும், இப்பள்ளிகளில் மொத்தம் 24,413 மாணவர்/மாணவியர்கள் கல்வி பயின்று வருகின்றனர் என்றும், மேலும் 43 விடுதிகளில் 2,202 மாணாக்கர்கள் தங்கி கல்வி பயின்று வருகின்றனர் என்றும் தெரிவித்து, பழங்குடியினர் நல பள்ளிகள் மற்றும் விடுதிகளில் தங்கி பயிலும் மாணாக்கர்கள் பாதுகாப்பை உறுதி செய்யும் பொருட்டு 312 பழங்குடியினர் நல பள்ளிகள் மற்றும் 43 பழங்குடியினர் நல விடுதிகளுக்கு அவசர கால பராமரிப்பு பணிகளான பழுதான குழல் விளக்குகளை மாற்றம் செய்தல், புதிய மின் விசிறிகள் அமைத்தல், மோட்டார் மற்றும் பிற மின்சாதனங்களை பழுது பார்த்தல், தண்ணீர் குழாய்கள் பராமரித்தல் மற்றும் பள்ளிகள், விடுதிகளுக்கு தேவையான இதர பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள கீழ்க்காணும் பட்டியலில் குறிப்பிட்டுள்ளவாறு ஒரு பள்ளி / விடுதிக்கு ஆண்டொன்றுக்கு ரூ.20,000/– (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) வீதம் 355 பள்ளிகள் / விடுதிகளுக்கு ரூ.71.00 இலட்சம் (ரூபாய் எழுபத்தொரு இலட்சம் மட்டும்) செலவினம் மேற்கொள்ள நிர்வாக அனுமதியும் நிதி ஒப்பளிப்பும் வழங்க அரசைக் கோரியுள்ளார்.

த.தி.பா..

| வ. எண் | பணி விவரம் | ஒரு பள்ளி/விடுதிக்கு ஆகும் செலவினம்(ரூ) | 312 பள்ளிகள் + 43 விடுதிகளுக்கு ஆகும் மொத்த செலவினம்(ரூ) |
|---|---|---|---|
| 1. | அவசர பராமரிப்பு பணிகளான பழுதான குழல் விளக்குகளை மாற்றம் செய்தல், புதிய மின் விசிறிகள் அமைத்தல், மோட்டார் மற்றும் பிற மின் சாதனங்களை பழுது பார்த்தல், தண்ணீர் குழய்கள் பராமரித்தல் மற்றும் பள்ளிகள், விடுதிகளுக்கு தேவையான இதர பராமரிப்பு பணிகள் | ரூ.20,000/– | ரூ.71,00,000/– |

3. மேற்காணும் பழங்குடியினர் நல இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, பழங்குடியினர் நல பள்ளிகள் மற்றும் விடுதிகளில் தங்கி பயிலும் மாணாக்கர்கள் பாதுகாப்பை உறுதி செய்யும்பொருட்டு 312 பழங்குடியினர் நல பள்ளிகள் மற்றும் 43 பழங்குடியினர் நல விடுதிகளுக்கு அவசர கால பராமரிப்பு பணிகளான பழுதான குழல் விளக்குகளை மாற்றம் செய்தல், புதிய மின் விசிறிகள் அமைத்தல், மோட்டார் மற்றும் பிற மின்சாதனங்களை பழுது பார்த்தல், தண்ணீர் குழாய்கள் பராமரித்தல் மற்றும் பள்ளிகள், விடுதிகளுக்கு தேவையான இதர பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள ஒரு பள்ளி / விடுதிக்கு ரூ.20,000/– (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) வீதம் 355 பள்ளிகள் / விடுதிகளுக்கு ரூ.71.00 இலட்சம் (ரூபாய் எழுபத்தோரு இலட்சம் மட்டும்) செலவினம் மேற்கொள்ள நிர்வாக மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி–3 இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும் :–

> 2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – 02 பழங்குடியினர் நலன் – 277 கல்வி – மாநிலச் செலவினங்கள்– KF - பழங்குடியினர் பள்ளிகளுக்கு அடிப்படை கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல் – 318 – பராமரிப்பு – 02 சிறப்புப் பராமரிப்பு
> (IFHRMS த.தொ.கு: 2225 02 277 KF 31802)

5. மேலே பத்தி 3–இல் ஒப்பளிக்கப்பட்ட ரூ.71,00,000/– செலவினத்தை மேற்கொள்ள தேவையான நிதியொதுக்கம் 2020–2021 –ஆம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீடு/இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இருப்பினும் மேற்கண்ட செலவினத்திற்கு 2020–2021 –ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் கொணர்ந்து சட்ட மன்றப் பேரவையில் ஒப்புதல் பின்னர் பெறப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி, மேலே பத்தி 3–இல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட பழங்குடியினர் நல இயக்குநருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும் பத்தி 3–இல் ஏற்பளிக்கப்பட்ட செலவினத்தை 2020–2021 –ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு உரிய வரைவு விளக்க குறிப்பினையும் மற்றும் திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு உரிய கருத்துருவையும் தவறாது நிதி (ஆதி(ம)ப.ந/வ.செ.பொது–1) துறைக்கு அனுப்பி வைக்குமாறு பழங்குடியினர் நல இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.கு. எண்.46633/2020, நாள்.31.12.2020–இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண்.1342(ஆயிரத்து முன்னூற்று நாற்பத்து இரண்டு)

(ஆளுநரின் ஆணைப்படி)

**ஒட்டெம் டாய்,**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.**

**பெறுநர்:**
பழங்குடியினர் நல இயக்குநர், சென்னை – 600 005.
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை –600 006/18/35.
பட்டி/சம்பளக் கணக்கு அலுவலர்(கிழக்கு), சென்னை – 600 008.
அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள்,
**நகல்:**
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், தலைமைச் செயலகம்,
சென்னை–600 009.
மாண்புமிகு அமைச்சர்(ஆதி(ம)பந)அவர்களின்
முதுநிலை சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–600 009.
நிதி(ஆதி(ம)பந)துறை, தலைமைச் செயலகம், சென்னை –600 009.
நிதி (வ.செ.பொI/II/வ.வ I )துறை
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை கூடுதல் தலைமைச்
செயலாளரின் முதன்மை தனிச் செயலர், சென்னை –600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்( ஆதிந.4 /பமே1/அநமு) துறை,
சென்னை –600 009.
இருப்புக்கோப்பு /உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.